# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **தமிழின் தொன்மை-தமிழ் மொழியின் சிறப்பு திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழின் தொன்மை-தமிழ் மொழியின் சிறப்பு திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள்

- ❖ தமிழ்நாடு தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. உலகின் மூத்த மொழியாக தமிழ் விளங்குகிறது என்பதனை "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே, வாளொடு முன்தோன்றி மூத்தக்குடி தமிழ்குடி" என்று புறப்பொருள் வெண்பாமாலை உணர்த்துகிறது.
- ❖ முதல் மாந்தன் தோன்றிய இலெமுரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்.

- "பஃறுளிஆற்றுடன் பன்மலைஅடுக்கத்துக்
  குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" **- சிலப்பதிகாரம்**

- திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
  மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள் **- பாரதிதாசன்**

- ❖ கி.மு. வில் அரிசி, மயில்தோகை, சந்தனம் முதலியவற்றை கிரேக்கம், உரோமபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.
- ❖ கிமு 10 ஆம் நூற்றாண்டில் தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்தில் இருந்து அரசன் சாலனுக்கு அனுப்பப்பட்டது.
- ❖ தமிழர்களுக்கு சாவக நாட்டுடனும், கடல் வாணிக தொடர்பு இருந்தது பற்றி கூறும் நூல் - மணிமேகலை.
- ❖ தமிழ்ச் சங்கம் பற்றி மரபுச் செய்திகள் தமிழை தவிர வேறு மொழிகளில் இல்லை என்று தனிநாயகம் அடிகள் கூறுகின்றார்.
- ❖ தமிழ்கெழு கூடல் - புறநானூறு
- ❖ தமிழ்வேலி ___ பரிபாடல்
- ❖ கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழன் - மாணிக்கவாசகர் - திருவாசகம்.
- ❖ பண்டைய தமிழகத்தின் ஏற்றுமதியைப் பற்றி எடுத்துக் கூறுகின்ற நூல் - பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும்.

- "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
  காலின் வந்த கருங்கறி மூடையும்
  வடமலை பிறந்த மணியும் பொன்னும் **- பட்டினப்பாலை**

- ❖ தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் முதலியவை இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.
  - நாடகக் கலை = இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்
  - நாடு + அகம் = நாடகம் உலக நிகழ்ச்சிகளின் கண்ணாடி - நாடகம்.

- உலகின் மொழி உருவம் பெறுவதற்கு முன் இசை பிறந்து விட்டது என்பர்.
- மனிதன் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு இசையே கருவியாயிற்று.
- தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.
- நரம்பின் மறை என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதிலிருந்து இசை இலக்கண நூல் உண்டு என உணர முடிகிறது.
- பாணன், பாடினி, கூத்தன், விரலி போன்ற இயலிசை நாடகக் கலைஞர்கள் இருந்தனர்.
- ஒப்பாரி என்பது இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்று இறந்தவரைப்பற்றி பாடுவது.
- கர்நாடக இசைக்கு தாய் - தமிழ் இசையே.
- பண்ணொடு தமிழொப்பாய் என தேவாரம் கூறுகிறது.
- தமிழர் 5 வகை நிலத்திற்கும் ஐந்திணைக்கும் ஏற்ற பண்ணிசை வகுத்தனர்.
- குழலினிது யாழினிது என்று வள்ளுவம் கூறுகின்றது.
- உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது திருக்குறள்.
- உழவுக்கு சிறப்பு பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.
- மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் - தமிழர்.
- களிறு எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே என்னும் புறப்பாடல் வீரத்தை முதற்கடமையாக்கியது.
- அக்காலப் பெண்களின் பெருவீரத்தை பாடியுள்ளவர் - ஒக்கூர் மாசாத்தியார்.
- பேரியாழ் - 21 நரம்புகள், மகரயாழ் - 19 நரம்புகள், சகோடயாழ் - 14 நரம்புகள், செங்கோட்டுயாழ் - 7 நரம்புகள்.

<u>**திராவிட மொழிகள்:**</u>

- இந்திய மொழிக்குடும்பங்களை அறிஞர்கள் நான்காக பிரித்துள்ளனர்.
  1. இந்தோ - ஆசிய மொழிகள்
  2. திராவிட மொழிகள்
  3. ஆஸ்திரோ - ஆசியா மொழிகள்
  4. சீன - திபெத்திய மொழிகள்

- இந்திய நாட்டை மொழிகளின் காட்சி சாலை என்று பேரராசிரியர் ச. அகத்தியலிங்கம் கூறியுள்ளார்.
- இந்தியாவில் மொத்தம் 12 மொழிக்குடும்பங்களும், அதில் 325 மொழிகளும் பேசப்படுவதாக இந்திய மானுடவியல் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.
- 23 க்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன இதை மூன்றாக பிரிக்கலாம்.

1. **தென் திராவிட மொழிகள்:**

   தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா

**2. நடுதிராவிட மொழிகள்:**

தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, ஐதபு

**3. வடதிராவிட மொழிகள்:**

குரூக், மால்தோ, பிராகுய் (குமாபி)

- தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் நான்கும் திராவிட பெருமொழிகள் ஆகும்.
- திராவிட மொழிகளில் அதிக ஒலிகளைக் கொண்டது தோடா.
- திராவிட இனம், திராவிட நாகரிகம் என்பதில் திராவிடம் பெயரடையாக வந்துள்ளது என்று கால்டுவெல் தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் கூறியுள்ளார்.
- திராவிடம் என்னும் சொல்லை நடைமுறைக்கு கொண்டுவந்தவர் கால்டுவெல் ஆவார்.
- திராவிடம் என்ற சொல்லை முதலில் உருவாக்கியவர் குமாரிலபட்டர் ஆவார்.
- தென்னிந்திய மொழிகளை தமிளியன் (அ) தமுலிக் என்று அழைத்தனர்.
- தமிழ் - திரமிள - திரவிட - திராவிட என்று தமிழில் இருந்து திராவிடம் என்ற சொல் உருவானதாக ஈராஸ் பாதிரியார் கூறுகின்றார்.
- தமிழில் நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப்பழமையான நூல் - தொல்காப்பியம்.
- 80 விழுக்காடு அளவிற்கு திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி தமிழ் ஆகும்.
- மரப்பாவைக் கூத்து - பொம்மலாட்டமாக மாறி - தோல்பாவை கூத்து - நிழற்பாவை கூத்து ஆனது.
- நாடகம் - நாட்டியமாகி - நாடக நாட்டியம் இன்று புதிய நாடக உலகில் உள்ளது.